சுருக்கு முறை வழக்கு எண்.176/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

Case S.TC.No. 176/2025 LW- 1 PW- 1

| | |
|---|---|
| Name | : துரைக்கண்ணன் (புகார்தாரர்) |
| Father's/Husband's Name | : அடைக்கண் |
| Village | : மீனாட்சிபுரம் |
| Taluk | : நத்தம் |
| District | : திண்டுக்கல் |
| Age | : 58/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 20th day of July 2026

(புகார்தாரர் ஆஜர். எதிரி ஆஜர். இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு புகார்தாரர் தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து மெடிக்கல் கடை வைத்து நடத்தி வருகிறேன். நான் எதிரிக்கு எதிராக காசோலை மோசடி தொடர்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விபரங்கள் எனக்கு நன்கு தெரியும். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை புகார்தாரர் தரப்பு சாட்சியமாக ஏற்றுக் கொண்டு அதில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை புகார்தாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 25.03.2025ம் தேதி மனுதாரருக்கு எதிரி வழங்கிய காசோலை (காசோலை எண்.183262) அசல் – ம.சா.ஆ.1 ஆகவும்,

2) 25.04.2025ம் தேதி மேற்படி காசோலையை மனுதாரர் நத்தம் சிட்டி யூனியன் வங்கி கிளையில் செலுத்தியதற்கான வங்கி சலான் – கணினி slip – ம.சா.ஆ.2 ஆகவும்,

3) 28.04.2025ம் தேதி மேற்படி காசோலைக்கு போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டதற்கான எனது வங்கி ரிட்டன் மெமோ – கணினி நகல் – ம.சா.ஆ.3 ஆகவும்,

4) 13.05.2025ம் தேதி மனுதாரர் தனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு (அசல் அஞ்சலக ரசீதுடன் கூடியது) – அலுவலக நகல் – ம.சா.ஆ.4 ஆகவும்

5) 15.05.2025ம் தேதி மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல ஒப்புதல் அட்டை அசல் – ம.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன். மனுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

மேற்படி ஆவணங்கள் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

Tmt.J.Aafreen Begum

Digitally signed by Tmt.J.Aafreen Begum
Date: 2026.07.20 11:58:26 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்